11

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1282/25 - 2003 අප්‍රේල් 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2003.04.03

1282/25 ஆம் இலக்கம் - 2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78 V

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 24அ என்னும் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,

2003.03.10

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உயிர் இரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2003.04.01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உயிர் இரசாயன, மூலக்கூற்று உயிரியல் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் (இதனகத்துப்பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருத்தல் வேண்டும்.

3. நிறுவகமானது (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக ஆணைக்குழுவின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.-

(அ) மாணவர்களை அனுமதிப்பதற்கு;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் மீது, ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய உயிர் இரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர் தொழில்நுட்பவியலின் கிளைகளில் போதனைக்கும் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உசாத்துணைக்கும் ஏற்பாடு செய்வதற்கு;

(இ) உயிர் இரசாயனத்திலும், மூலக்கூற்று உயிரியலிலும், உயிர் தொழில்நுட்பவியலிலும் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை ஆய்ந்தறியும் நோக்கத்திற்காக, பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பரீட்சைகளை நடாத்துவதற்கும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்தும் துணைவிதிகளில் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளைத்

திருப்திப்படுத்தியும், பல்கலைக்கழகத்தின் பட்டங்களினதும், திப்ளோமாக்களினதும் சான்றிதழ்களினதும் ஏனைய கல்விசார் சாதனைகளினதும் அளிப்புக்கும் தகுதியுடைய ஆட்களைப் பல்கலைக்கழகத்திற்கு விதப்புரை செய்வதற்கும்;

(ஈ) அவசியமானவிடத்து பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும், ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும், உயிர் இரசாயனவியலிலும் மூலக்கூற்று உயிரியலிலும் உயிர் தொழினுட்பவியலிலும் அளிக்கப்படவுள்ள பட்டங்களையும் திப்புளோமாக்களையும் சான்றிதழ்களையும் வேறு கல்விசார் சாதனைகளையும் தீர்மானிப்பதற்கும்;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களையொத்த அல்லது பொருளளவில் அக்குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடைய இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஆசிரியர்களையும் மாணவர்களையும் அத்துடன் கல்விமான்களையும் பரிமாறுதல் மூலம் அல்லது வேறு வகையில் ஒத்துழைப்பதற்கும்;

(ஊ) நிறுவகத்திற்கு அனுமதிகோரும் ஆட்கள் சித்தியடைந்த பரீட்சைகளையும் பயிற்சி அல்லது கற்கைக் காலப் பகுதிகளையும் பல்கலைக்கழகங்களில் மேற்கொண்ட கற்கைகளையும் பல்கலைக்கழக மட்டத்தில் கற்கும் இடங்களையும் சட்டத்தால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான பரீட்சைகளுக்கும் நிறுவகத்தில் பயிற்சி அல்லது கற்கைக் காலப்பகுதிகளுக்கும் அல்லது அதன் அத்தகைய பாகத்திற்கும் சமமாக இருப்பதாக அங்கீகரிக்குமாறு பல்கலைக்கழகத்தின் மூதவைக்கு விதப்புரை செய்வதற்கும் எவ்வேளையிலும் அத்தகைய அங்கீகரிப்பைக் கைமீட்பதற்கும்;

(எ) நிறுவகத்துடன் தொடர்புடையதான அத்தகைய போதனையின், பயிற்சியின், ஆராய்ச்சியின், அபிவிருத்தியின் அல்லது உசாத்துணையின் நோக்கங்களுக்காக நூலகங்களையும் ஆய்வு கூடங்களையும் அத்துடன் வேறு கட்டிடங்களையும் நிறுவுவதற்கும் அவற்றுக்குப் பொருட்களைப் பெறுவதற்கும் பேணுவதற்கும்;

(ஏ) நிறுவகத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய கற்பித்தல், நிருவாக மற்றும் வேறு பதவிகளை உருவாக்குதலை பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைப்பதற்கும் அத்துடன் அவற்றை ஒழிப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்;

(ஐ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களையும் புலமைப் பரிசில்களையும் புலமைப் பொருளுதவிகளையும் ஏழைக்கல்வி உதவிகளையும் பதக்கங்களையும் அத்துடன் வேறு பரிசுகளையும் அமைத்துருவாக்குவதற்கும் அளிப்பதற்கும்;

(ஒ) நிறுவகத்திற்கு வெளியே கற்கைப் பயிற்சி நெறிகளை அல்லது அத்தகைய கற்கைப் பயிற்சி நெறிகளின் பாகங்களை அவற்றை ஏற்பாடு செய்யுமாறு தேவைப்படுத்தும் எவையேனும் துணை விதிகளுக்கிணங்க நடத்துவதற்கு ஒழுங்கு செய்வதற்கும்;

(ஓ) அரசாங்கக் கொள்கைக்கும் கட்டணத்தில் கொடுப்பனவைத் தேவைப்படுத்தும் விதிக்கும் இணங்க கட்டணங்களைக் கோருவதற்கும் பெறுவதற்கும்; அத்துடன்

(ஔ) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்கூறப்பட்ட தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் இடைநேர் விளைவான அல்லது அவற்றின் விளைவாந்தன்மையினதான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்வதற்கும்

தத்துவமுடையதாதல் வேண்டும்.

4. நிறுவகம் பின்வரும் அலுவலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) பணிப்பாளர்

(ii) எந்தப் பதவியை வகிக்கும் அலுவலர் இப்பந்தியின் நோக்கங்களுக்காக அலுவலர் ஒருவராக இருக்கின்றாரோ அந்தப் பதவியொன்றாக இக்கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர்.

5. (1) நிறுவகத்தின் முதலாவது பணிப்பாளர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின் விதப்புரையின்மீது பல்கலைக்கழகத்தின் பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு பணிப்பாளரும் நிறுவகத்தின் முகாமைச் சபையால் விதந்துரைக்கப்பட்ட மூன்று ஆட்களைக் கொண்ட குழாமொன்றிலிருந்து பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும் ஆளெவரும் தொடர்ச்சியாக இரண்டு தவணைகளுக்குமேல் பணிப்பாளராக நியமிக்கப்படுதலாகாது. ஆயின் மேலும், பணிப்பாளரின் நியமனத்திற்கு ஆணைக்குழுவின் ஒருப்பாடு பெறப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணிப்பாளர், அதன் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி அல்லது (3) ஆம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பதவியில் இருந்து அகற்றப்படாலன்றி, அவரது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு அல்லது அவரது ஓய்வுபெறும் வயதைப் பூர்த்தி செய்யும் வரை, அதாவது இவை இரண்டுள் எது முன்னராக நிகழ்கின்றதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர், அத்தகைய நோக்கத்திற்கென கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் முகாமைச் சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டனவாக்கொன்றின் மீது பேரவையால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(4) பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட பணிப்பாளர் ஒருவர் பணிப்பாளராக அவரது நியமனத்திற்கு உடன் முன்னர் உயர் கல்வி நிறுவகமொன்றின் உறுப்பினரொருவராக இருந்திருப்பின் அத்தகைய உயர் கல்வி நிறுவகத்தில் அவரது நிலையான பதவிக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். ஆயின், அவர் சட்டத்தில் தரப்படும் அவரது முன்னைய பதவியிலிருந்து ஓய்வுபெறும் வயதை அடையாதவராக இருந்திருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர், சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதுக்கள் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து, துணைவேந்தர் அத்தகைய இயலாமை ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள் பணிப்பாளரின் கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குப் பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை பணிப்பாளரின் அன்றாட கடமைகளைப் பதிவாளர் கவனித்தல் வேண்டும்.

(6) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், துணைவேந்தர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள் பணிப்பாளரின் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை பதிவாளர் பணிப்பாளரின் கடமைகளைக் கவனித்தல் வேண்டும்.

6. (1) பணிப்பாளர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்விசார் அலுவலராகவும் இருத்தல் வேண்டும். இவர் நிறுவகத்தின் முகாமைச் சபையினதும் நிறுவகத்தின் கல்விசார் குழுவினதும் பதவிவழி உறுப்பினரொருவராதல் வேண்டும். இவர் நிறுவகத்தின் வேறெந்த அதிகார சபையினதும் அல்லது குழுமத்தினதும் கூட்டத்தில் சமூகமாயிருப்பதற்கும் அதில் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அவர் அத்தகைய வேறு அதிகார சபையின் அல்லது குழுமத்தின் உறுப்பினரொருவராக இருந்தாலன்றி அத்தகைய கூட்டம் எதிலும் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) சபையால் அதன் சார்பில் காலத்துக்குக் காலம் சட்டமுறையாகத் தமக்கு வழங்கக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, கட்டளைச் சட்டத்தினதும் சட்டத்தினதும் அத்துடன் வேறு ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகள், அவை நிறுவகத்தைத் தொடர்புறுத்தும் அளவுக்கு, முறையாக அனுசரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அவர், அந்நோக்கத்திற்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றையும் பிரயோகிக்கலாம்.

(3) முகாமைச் சபையின் முடிபுகளுக்கும் பயனளிப்பது அல்லது பயனளிக்கச் செய்விப்பது பணிப்பாளரது கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர், நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

(5) பணிப்பாளர், பல்கலைக்கழகத் துணை வேந்தரின் பணிப்பின் கீழ் நிறுவகத்திற்குள் ஒழுக்காற்றைப் பேணுவதற்கு பொறுப்பாயிருத்தல் வேண்டும். ஒழுக்காறு தொடர்பிலான எவையேனும் துணைவிதிகள் இல்லாதவிடத்து, பல்கலைக்கழகத்தின் தோதான துணைவிதிகளும் வேறு விதிகளும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

7. நிறுவகம் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) முகாமைச் சபை;

(ii) கல்விசார் குழு; அத்துடன்

(iii) நிறுவகத்தின் அதிகார சபைகளாக இருப்பதற்கென கட்டளைச் சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்;

8. முகாமைச் சபை, (இது இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக்குழுவாதல் வேண்டும் என்பதுடன் அது, பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும்:-

(1) ஆறு பதவிவழி உறுப்பினர்கள், அதாவது,-

(அ) பணிப்பாளர், இவர் தவிசாளராதல் வேண்டும்;

(ஆ) உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர்;

(இ) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிப்பாடசாலையின் பணிப்பாளர்;

(ஈ) பல்கலைக்கழகத்தின் உயிர் இரசாயன, மூலக்கூற்று, உயிரியல் பகுதிகளின் தலைவர்கள்;

(உ) பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்தின் பீடத் தலைவர்;

(ஊ) பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடத் தலைவர்; அத்துடன்

(2) வேறு எட்டு உறுப்பினர்கள்; அதாவது-

(அ) பல்கலைக்கழகப் பேரவையால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்;

(ஆ) பல்கலைக்கழக மூதவையால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து பெயர்குறித்து நியமிக்கப்பட்டு பல்கலைக்கழகப் பேரவையால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்;

(இ) தொழில்நுட்பவியல், கல்வி, மற்றும் ஏதேனும் சார்புடைய உயர்தொழில் அல்லது நிருவாகம் என்னும் துறைகளில் சிறந்த சேவை புரிந்துள்ள ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்.

9. (1) சபையின் தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதலும் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயிராதவிடத்து, உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கென சமுகமாயிருக்கும் உறுப்பினர்களிடையேயிருந்து வேறு எவரேனும் உறுப்பினரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) பெயர்குறித்து நியமிக்கப்பட் அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி அவரது பெயர்குறித்த நியமனத் திகதியிலிருந்து அல்லது நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு உறுப்பினர் ஒருவராகப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மீளவும் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளவும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும். பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அவரது பதவியை வறிதாக்குவாராயின், அவரது அடுத்துறுபவர், அவரது பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி, அவரது முன்னுறுபவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

ஆயின், மேலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் எந்த அந்தஸ்த்தின் பயனைக்கொண்டு சபையின் உறுப்பினரொருவராக இருக்கின்றாரோ அந்த அந்தஸ்தை அவர் வகிக்கின்றவரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) சபையின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான வேண்டுகோளொன்றின் மூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதமொன்றின்மூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.

(5) லீவுக்கான அனுமதி இல்லாமல் தொடர்ச்சியாக சபையின் மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுகின்ற சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சபையின் உறுப்பினர் ஒருவராக அவரது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் விளைவாக ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கும் அதிகாரி பொருத்தமான ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(6) சபையின் உறுப்பினர் ஒருவருக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் சபை உறுப்பினர்களுள் ஐந்துக்குக் குறையாதோராதல் வேண்டும்.

(8) சபை, அவசியமானபொழுது கூடுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும் அது ஒவ்வோராண்டும் எட்டுத்தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(9) தவிசாளர், அவசியமானதென அவர் கருதுகின்றபோது அல்லது சபையின் மொத்த உறுப்பாண்மையின் அரைவாசிக்குக் குறையாதோரால் எழுத்திலான வேண்டுகோள் ஒன்று அவருக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வேண்டுகோள் அத்தகைய விசேட கூட்டத்தின் நோக்கத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

10. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய சபை, பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.-

(அ) நிறுவகத்தின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு அத்துடன் நிருவகிப்பதற்கு;

(ஆ) சட்டத்தினதும் வேறு ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாட்டிற்கிணங்க நிறுவகம் தொடர்பான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் தீர்மானிப்பதற்கும்;

(இ) நிறுவகத்திற்கு அதன் பொது நிருவாகத்திற்கெனவும் முகாமைத்துவத்திற்கெனவும் அத்துடன் வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கெனவும் கிடைக்கச் செய்யப்பட்ட நிதியை நிருவகிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும்;

(ஈ) பாடசாலைக்குச் செய்யப்பட்ட அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தின் மரணசாதனக் கையளிப்புகள், நன்கொடைகள், வேறு மானியக்கொடைகள் என்பவற்றை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெறுவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் ;

(உ) நிறுவகத்தின் ஆண்டறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளையும் ஐந்தொகையையும் மதிப்பீடு செய்வதற்கும், அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும், பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பிப்பதற்கும் ;

(ஊ) எதிர்வரும் நிதியாண்டிற்கு நிறுவகத்தின் மதிப்பீடுகளைத் தயாரிக்கச் செய்வித்தலும், அவை அங்கீகரிக்கப்பட்டதன் மீது அத்தகைய மதிப்பீடுகளை பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பிப்பதற்கும் ;

(எ) உயிரியலிரசாயனத்திலும் அணுத்திரண்ம உயிரியலிலும் உயிரியல் தொழிநுட்பவியலிலும் அளிக்கப்படவேண்டிய பட்டங்களையும், திப்ளோமாக்களையும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களையும் தகைமைகளையும், பின்பற்றப்படவேண்டிய பாடநெறிகளையும் சித்தியடையவேண்டிய பரீட்சைகளையும் அத்தகைய சான்றிதழ்களுக்கும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களுக்கும் தகைமைபெற விரும்பும் மாணவர்களால் திருப்திப்படுத்தப்படவேண்டிய வேறு நிபந்தனைகளையும் கல்விசார் குழுவுடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்திற்கு விதிப்புரை செய்வதற்கும் ;

(ஏ) எக்கருமத் தொடர்பில் துணைவிதிகள் அல்லது விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமம் எதற்கும் துணைவிதிகளை அல்லது விதிகளை ஆக்குவதற்கு :
ஆயின் எவ்வாறாயினும், பாடநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பிலான துணைவிதி அல்லது விதி எதுவும் கல்விசார் குழுவிடமிருந்து பெற்ற அறிக்கைகளைப் பரிசீலனை செய்தபின்னர் தவிர ஆக்கப்படுதலாகாது ;

(ஐ) நிறுவகத்தின் பணியைக் கொண்டுநடாத்துவதற்குத் தேவைப்படும் கட்டிடங்களையும், வளவுகளையும், தளபாடங்களையும், உபகரணங்களையும் வேறுபொருட்களையும் ஏற்பாடு செய்வதற்கு ;

(ஒ) பல்கலைக்கழகத்திற்கு -

(i) நிறுவகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான கற்பித்தல் மற்றும் நிருவாகப் பதவிகளை உள்ளடக்கிய அத்தகைய பதவிகளை உருவாக்குதலையும் அத்தகைய பதவிகளை ஒழிப்பதனையும் அல்லது இடைநிறுத்துவதனையும் ; அத்துடன்

(ii) நிறுவகத்திற்கு நியமிக்கப்படவேண்டிய ஆசிரியர்களிடமும் அலுவலர்களிடமும் வேறு ஊழியர்களிடமும் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளையும் ;

(iii) நிறுவகத்தின் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களை இடைநிறுத்துவதற்கு, பதவிநீக்குவதற்கு அல்லது வேறு வகையில் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் ;

(iv) நிறுவகத்தின் ஆசிரியர்களாகவும், பரீட்சகர்களாகவும், நியமிக்கப்படுவதற்கு தகுதியுடைய ஆட்களையும் விதப்புரைப்பதற்கும்.

(ஓ) பொருத்தமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினதான நிலையியற் குழுக்களை அல்லது வேளைக்கேற்ற குழுக்களை நியமிப்பதற்கும் அவற்றின் பணித்துறை நியதிகளைக் குறித்துரைப்பதற்கும் ; அவற்றின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்கும் திரிபுபடுத்துதல்களுடனோ அல்லது திரிபுபடுத்துதல்கள் இன்றியோ அத்தகைய அறிக்கைகளை அங்கீகரிப்பதற்கும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரிப்பதற்கும் ;

(ஔ) சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (VII) ஆம் பந்தியின்கீழ் ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தவிர்ந்த, ஏனைய மாணவர்களைப் பாடநெறிகளுக்கு அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளை, கல்விசார் குழுவுடனான கலந்தாலோசனையுடனும் பல்கலைக்கழத்தினதும் ஆணைக்குழுவினதும் ஒருப்பாட்டுடனும் தீர்மானிப்பதற்கும் ;

(க) பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உட்பட நிறுவகத்திற்குரிய பணங்களை நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி எந்தப் பிணயத்தில் நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை முதலீடு செய்வது சட்டமுறையானதோ, அந்த ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பில் முதலீடு செய்வதற்கும் ; அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் எவையேனும் அத்தகைய பணங்களை இலங்கையில் அசைவற்ற ஆதனக் கொள்வனவில் முதலீடு செய்வதற்கும் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்துவதற்கும் அல்லது உடனடியான செலவினத்திற்குத் தேவைப்படாத அத்தகைய பணங்களின் ஏதேனும் பாகத்தை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பீட்டில் வைப்பீடு செய்வதற்கும் ;

(ங) இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிறுவகத்தின் தத்துவங்களுக்கு இடைநேர்விளைவான அல்லது அதன் விளைவாந்தன்மையதான நிறுவகத்தின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கு ;

(ச) நிறுவகத்தின் மாணவர்களது பொது நலனை ஊக்குவிப்பதற்கும் அத்தகைய சபையின் அமைப்பையும் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் குறித்துரைப்பதற்கும் ; அத்தகைய சபையில் மாணவர்களின் பிரதிநிதித்துவமும் அடங்குதல் வேண்டும் ;

(2) ஏதேனும் கல்விசார் கருமம் தொடர்பிலான தீர்மானம் எதுவும், கல்விசார் குழுவுக்கு அதன்மீது அதன் அபிப்பிராயத்தைப் பதிவுசெய்து சபைக்கு அனுப்புவதற்கான வாய்ப்பொன்று முதலில் வழங்கப்பட்டிருந் தாலன்றி சபையால் வழங்கப்படுதலாகாது ;

ஆயின், அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எதுவும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுனன்றி செயற்படுத்தப்படு தலாகாது.

இப்பந்தியின் "கல்விசார் கருமம்" என்பது கல்விசார் குழுவின் கட்டுப்பாட்டிற்கும் பொதுப் பணிப்பிற்கும் அமைந்த ஏதேனும் கருமம் என்று பொருள்படும்.

11. (1) பின்வரும் ஆட்களைக் கொண்ட கல்விசார் குழுவொன்றிருத்தல் வேண்டும் ;-

(அ) பணிப்பாளர் ; இவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) நிறுவகத்தில் போதனை வழங்கும் ஆசிரியர்களாகவும் வேறு பணியாட்டொகுதியினராகவும் தங்களது நியமனத்தில் உறுதிசெய்யப்பட்டுள்ளவர்களான அத்தகைய ஆசிரியர்களும் வேறு பணியாட்டொகுதியினரும் ;

(இ) பல்கலைக்கழகத்தின் உயிர் இரசாயன, மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் துறையினால் அதன் சொந்த கல்விசார் பணியாட்டொகுதியினரிடையேயிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் துறையினால் அதன் சொந்த கல்விசார் பணியாட்டொகு தியினரிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர்.

(2) கல்விசார் குழு சபையின் ஒருப்பாட்டுடன் குறித்துரைக்கப்பட்டவொரு நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்டவொரு காலப் பகுதிக்கு ஓர் ஆளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களைத் தேர்ந்து எடுக்கலாம் ; ஆனால் அவ்வாறு தேர்ந்து எடுக்கப்பட்ட ஆளெவரும் கல்விசார் குழுவில் தேர்தலுக்கு நிற்பதற்கோ அல்லது ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கோ உரித்துடையவராதலாகாது.

(3) பந்தி 9 என்பதன் (2) ஆம், (4) ஆம், (5) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகள் கல்விசார் குழுவின் நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) கல்விசார் குழுவின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், எவரேனும் இருப்பின் அவர்கள் நீங்கலாக அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலிரண்டிற்குக் குறையாத சிறிய எண்ணிக்கையாதல் வேண்டும் ;

(5) கல்விசார் கூட்டவை அவசியமானபோது கூடுதல் வேண்டும் ; எவ்வாறாயினும் ஒவ்வோராண்டும் பத்து தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

12. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கல்விசார் குழுவானது நிறுவகத்தின் போதனை, பயிற்சி, ஆராய்ச்சி அத்துடன் பரீட்சைகள் என்பன மீது கட்டுப்பாட்டையும் பொதுவான பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கல்விசார் குழுவானது, (1) ஆம் உட்பந்தியால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி -

(அ) சபையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தைப் பரிசீலனை செய்தலும் அறிக்கையிடுதலும் ;

(ஆ) பாடநெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது பரீட்சைகள் தொடர்பானவை அல்லாத விடயங்கள் மீது சபைக்கு விதப்புரைகளும் அறிக்கைகளும் சமர்ப்பித்தலும் ;

(இ) ஏதேனும் விசேட பாடம் அல்லது பாடங்கள் பற்றி பரிசீலனை செய்து அறிக்கையிடும் நோக்கத்திற்காக கல்விசார் குழுவின் உறுப்பினர்கள் அல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தலும் வேண்டும் ;

(ஈ) சபைக்கு -

(i) பாடநெறிகளுக்கும், பரீட்சைக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளையும் ;
(ii) ஆசிரியர்களாகவும், பரீட்சகர்களாகவும் அங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களையும் ;
(iii) விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்தும் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியுள்ளவர்களும் பட்டங்களின், திப்ளோமாக்களின், சான்றிதழ்களின் அத்துடன் வேறு கல்வி சார் சாதனங்களின் அளிப்புக்குத் தகுதியுடையவர்களுமான ஆட்களையும் ;
(iv) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களுக்கும் புலமைப் பரிசில்களுக்கும் புலமைப் பொருளுதவிகளுக்கும் ஏழைக்கல்வியுதவிகளுக்கும் பதக்கங்களுக்கும் வேறு பரிசுகளுக்கும் போட்ட முறைகளையும் நிபந்தனைகளையும் ;
(v) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களினதும், புலமைப்பரிசில்களதும், புலமைப் பொருளுதவிகளதும் ஏழைக்கல்வியுதவிகளதும் பதக்கங்களினதும் வேறு பரிசுகளினது அளிப்புக்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களையும் ;

விதப்புரை செய்தலும் வேண்டும் ; அத்துடன்

(உ) இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பாடசாலையின் தத்துவங்களுக்கு இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையினதான கல்விசார் விடயங்கள் தொடர்பில் பாடசாலையின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்.

13. நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

14. (1) நிறுவகம், உயிர் இரசாயன, மூலக்கூற்று, உயிரியல், மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவக நிதியம் என அழைக்கப் படும் நிதியமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இதற்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் ;-

(அ) ஏதேனும் தோதான சாதனத்திற்கிணங்க நிறுவகத்திற்குச் செலுத்தப்படவேண்டிய எல்லாக் கட்டணங்களும் ;

(ஆ) பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்டவையும் நிறுவகத்திற்கு மானியக் கொடையாக ஆணைக்குழுவால் செலவீடு செய்யப்பட்டவையுமான எல்லாப் பணங்களும் ;

(இ) அறக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருமானமும் ;

அத்துடன்

(ஈ) எத்தன்மையதுமான மூலத்திலிருந்து நிறுவகத்திற்குக் திரளும் அத்தகைய வேறு பணங்கள்.

(2) குறிப்பிட்டவொரு மாதத்திற்குள் நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப்பணங்களினதும் பொழிப்பொன்று, தோதான வருமானத் தலைப்பின்கீழ் வகுக்கப்பட்டு அடுத்துறும் மாதத்தின் இறுதிக்குமுன்னர் பணிப்பாளரால் ஆணைக்குழுவுக்கு அதன் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

15. பின்வருவன பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்:-

(i) நிறுவகத்தின் கணக்குகளை கட்டளைச் சட்டத்தால் விதித்துரைக்கப்படகூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல் ;

(ii) நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெறுதலும் அத்தகைய பணங்களைத் தகுந்த கணக்குத் தலைப்பில் வரவு வைத்தலும் ;

(iii) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் : அத்துடன் ஆணைக்குழுவுக்குத் தேவையானவாறு அடுத்துவரும் ஆண்டின் மதிப்பீடுகளையும் ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் சபைக்குத் தயாரித்தல் ;

ஆயின், எவ்வாறாயினும், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அல்லது குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து செய்யப்பட்ட மானியக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் நிறுவகத்தின் கணக்குகளில் புறம்பாக கணக்கீடு செய்யப்படவேண்டும் என்பதுடன் நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியக்கொடைகள் அல்லது அறக்கொடைகள் எந்த நோக்கங்களுக்காக ஆக்கப்பட்டனவோ முறையே அந்த எவையேனும் நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் அல்லாத வேறு எவையேனும் நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள்களுக்காக கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

16. (1) நிறுவகமானது, ஆண்டுக் கணக்குக் கூற்றொன்றையும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விவரங்கள் அடங்கிய புள்ளிவிவரங்களையும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப் புத்தகங்கள் நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

17. உயர்கல்வி நிறுவனமொன்றின் கணக்குகளின் கணக்காய்வுக்கு இயல்பானவாறு சட்டத்தின் பாகம் XIII இன் அத்தகைய ஏற்பாடுகள் நிறுவகக் கணக்காய்வுக்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

18. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதியானது, நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைத் திறமையாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், ஆசிரியர்களையும், மற்றும் வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, பல்கலைக்கழகத்தால் அதன் சொந்த பணியாட்டொகுதியிடையேயிருந்து விடுவிப்பின்மீது ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது விடயத்திற்கேற்ப ஆணைக்குழுவால் அல்லது பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் பாகம் X இன் ஏற்பாடுகள் பாடசாலையின் பணியாட்டொகுதிக்கான நியமனங்களுக்கும் அவை தொடர்பிலு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் அலுவலர், ஆசிரியர் அல்லது ஊழியர் ஒருவர் நிறுவகத்தின் சேவைக்கு முழுநேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, நிறுவகம், அவருக்கு பல்கலைக்கழகத்தில் அவரது நிலையான பதவியின் சம்பளத்தையும் படிகளையும் செலுத்துதல் வேண்டும். வேறு ஏதேனும் விடயத்தில் நிறுவகம் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியர்களுக்கு அது பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடனும் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறும் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படியைச் செலுத்தலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதி பணிப்பாளரின் பணிப்பிற்கும் ஒழுக்காற்று கட்டுப்பாட்டிற்கும் அமைந்தோராதல் வேண்டும்.

19. ஏதேனும் அதிகார சபையின் அல்லது நிறுவகத்தின் வேறு குழுமத்தின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று அல்லது வெற்றிடங்கள் இருப்பதன் காரணமாக அல்லது அத்தகைய உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைப்பாடு அல்லது எவையேனும் குறைப்பாடுகள் இருப்பதன் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

20. இக்கட்டளைச் சட்டத்தில் -

"சட்டம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் என்று பொருள்படும் ;

"தோதான சாதனம்" என்பது சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"முதவை" என்பது கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதவை என்று பொருள்படும் ;

"பேரவை" என்பது கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேரவை என்று பொருள்படும் ;

"துணைவேந்தர்" என்பது கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எனப்பொருள்படும் ;

"பதிவாளர்" என்பது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் எனப் பொருள்படும் ;

"ஆசிரியர்" என்பது சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப் பொருள்படும் ;

"துணைவிதிகள்" என்பது சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட துணைவிதிகள் என்று பொருள்படும்

"உயர்கல்வி நிறுவனம்" என்பது எந்த நிறுவனம் தொடர்பில் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ என்னும் பிரிவின் கீழ் கட்டளை ஒன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்நிறுவனம் எனப்பொருள்படும்.

4-511

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.